DINA MALAR

31 JAN 2022

PAGE 1

# சமுதாயக் கல்லூரி மாணவர் சேர்க்கை 3ம் தேதி இறுதிக்கட்ட கலந்தாய்வு

புதுச்சேரி,ஜன. 31–

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் வரும் 3ம் தேதி இறுதிக்கட்ட கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை நடக்கிறது.

கல்லூரி முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு;

லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியில் 2021–22 ம் ஆண்டு சேர்க்கைக்கான கலந்தாய்வு அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடந்தது.

காலியாக உள்ள இளங்கலை மற்றும் பட்டயப் படிப்புகளுக்கு வரும் 3ம் தேதி இறுதிக்கட்ட கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை நடக்கிறது. காலியிடங்கள் குறித்த விவரங்கள் கல்லூரியில் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே இதுவரை விண்ணப்பிக்காதவர்கள், விண்ணப்பித்து இடம் கிடைக்காதவர்கள், இவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

கல்லூரியில் சேர விரும்புவோர் இன்று 31ம் தேதி முதல் 2ம் தேதி வரை, சமுதாயக கல்லூரியின் http://pucc.edu.in என்ற இணைதளம் மூலம் விண்ணப்பித்து, 3ம் தேதி நடக்கவுள்ள கலந்தாய்வில் பங்கேற்று பயன் பெறலாம்.

மேலும் விபரங்களுக்கு கல்லூரியின் மாணவர் சேர்க்கை உதவிமையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.